4235 (6)

உ

முருகா

திருப்புகழமிர்தம்

விரோதி மாத வெளியீடு மாசி



புதுப்பிக்கப்பட்ட வடலூர் சத்தியஞான சபை

ஆசிரியர்

கிருபானந்தவாரி

விலை] [அணா 3

காங்கேயநல்லூர் முருகப்பெருமான் திருவாலய பிரம்மோற்சவ இலக்ஷதீப நல்விழா

விரோதி மாசி 11 (22-2-50) புதன்கிழமை கொடியேற்றம்
,, ,, 13 (24-2-50) வெள்ளி கிருத்திகை மயில்வாகனம்
,, ,, 15 (26-2-50) ஞாயிறு தெய்வயானை திருமணம்
,, ,, 19 (2-3-50) வியாழன் காலை வள்ளி திருமணம்
,, ,, 20 (3-3-50) வெள்ளி கொடியிறக்கம்

விரோதி மாசி 25ம் நாள் [8-3-50] புதன்கிழமை விசாகம் பகல் 3 மணிக்குமேல் மகாபிஷேகமும் அலங்கார ஷோடசோபசார தீபாராதனைகளும் நடைபெறும். மாலை 7 மணிக்கு இலக்ஷதீபக் காட்சி: இரவு 11 மணிக்குமேல் விசேட அலங்காரத்துடன் பெருமான் திருவீதி பவனி, தேவார திருப்புகழ் பாராயணம், பாண வேடிக்கை, பள்ளியறை சேர்க்கை மறுநாள் வியாழக்கிழமை காலை ஏகாந்தசேவை, திருக்கோயிலில் திருவுலா.

8-3-50 புதன்கிழமை இரவு 3மணிக்கு ஸ்ரீ சுந்தரவிநாயகராலயத்தில் சிவஸ்ரீ மல்லையதாஸ் பாகவதரவர்கள் முன்னிலையில் திருமுருக கிருபானந்தவாரி அவர்களால் திருப்புகழ் விரிவுரை நிகழும்.

நாளது விரோதி ஆண்டு மாசித்திங்கள் 13ம் நாள் [வெள்ளிக்கிழமை] முசிரிதாலுகா திருஈங்கோய்மலை ஸ்ரீ பால தெண்டாயுதபாணிக்கு வழக்கம்போல் அன்பர்களின் பேருதவியுடன் "குமார கிருத்திகை" உத்சவம் சிறப்பாக நடைபெறும். அன்பர்கள் பொருளுதவி செய்து வந்து தரிசித்து உத்சவத்தைச் சிறப்பிக்கவேண்டுகிறோம். உபயமாக பணம் அனுப்புவோர் M. N. தங்கவேலுபிள்ளை, மணமேடு P. O. முசிரிதாலுகா, திருச்சி ஜில்லா, என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.

திருஈங்கோய்மலை முருகனடியார்கள்.

யாழ்ப்பாணத்தில் திருப்புகழமிர்தம் தனிப் பிரதிகள் கீழ்க்கண்ட இடத்தில் கிடைக்கும்.

கோ. இராமசாமி, தமிழ்ப்பண்ணை. K.K.S. ரோடு, யாழ்ப்பாணம்

வரப்பெற்றோம்

1. ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு.

2. முருகன் தோத்திரப் பதிகங்கள்
தேவகோட்டை தமிழ் வள்ளல் சேவு மெ. மெய்யப்பசெட்டியார் இயற்றியன.

உ

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

வடலூர்

சத்திய ஞான சபை

தூபி நீராட்டுதலும்
ஜோதி நிறுவுதலும்

திருவுடையீர்!

அமிழ்தினும் இனிய தமிழகத்தில் அருள் நெறியைப் பரப்புதற் பொருட்டு ஆன்றோர் பலர் அவதரித்தனர். சாதி மத சமயப் பிணக்குகள் மலிந்தபோது, சமரச சுத்த சன்மார்க்கத்தை உலக மெல்லாம் கடைப்பிடித்து ஒழுகி உய்யும் பொருட்டு அவதரித்த அருள் ஞான வள்ளல் ***இராமலிங்க அடிகள்.***

வள்ளல் பெருந்தகை, உடல் வளர சத்திய தருமச்சாலையை யும், உணர்வு வளர சத்திய வேத பாடசாலையையும், உயிர் வளர ***சத்திய ஞான சபை***யையும் நிறுவியருளினார்கள். தாம் அகத்தே கண்ட அருட்பெருஞ்ஜோதியை அனைவரும் புறத்தே கண்டு உய்யுமாறு சத்தியஞான சபையில் ***அருட்பெருஞ்ஜோதியை*** பிரஜோற்பத்தி ஆண்டு தைத் திங்கள் 13ம் நாள் (25—1—1872) வியாழக்கிழமை நிறுவியருளினார்கள்.

இந்த அரிய சபை பழுதுபட்டு இளஞ் சபையில் ஜோதி தரிச னம் நிகழலாயிற்று. ***திருவருளால் சபை மிகவும் மேன் மையாக புதுக்கப் பெற்று முடிவுபெற்றது.***

அருட்பெருஞ்ஜோதி யண்ணலின் ஒப்பற்ற கருணையைத் துணைகொண்டு, விக்ருதி யாண்டு சித்திரைத் திங்கள் 12ம் நாள் திங்கட்கிழமை (24—4—1950) காலை 9-30 மணிக்குள் மிதுன ஒரையில், ***தூபி நீராட்டுதலும் ஜோதி நிறுவுதலும்*** நிகழும். அன்பர்கள் அனைவரும் வந்திருந்து கண்குளிரக் கண்டு கருத்துங் குளிர்ந்து எல்லா நலன்களையும் பெறுமாறு வேண்டு கின்றோம்.

வடலூர்
விரோதி மாசி-1

திருப்பணித் தொண்டன்
கிருபானந்தவாரி

பொருளுதவி செய்யவிரும்பும் அன்பர்கள் கீழ்க்கண்ட முக வரிக்கு விரைவிலனுப்பி வைக்கவும்.

திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்,
வடலூர் P. O., Via கடலூர் O. T., S. A. Dt.

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 14 | விரோதி ஆண்டு மாசித் திங்கள்
பிப்ரவரி - 1950 | இதழ் 11

திருப்புகழ்

வைத்தீசுரன் கோயில்

மூலா தாரமொ டேற்றி யங்கியை
ஆரு தாரமொ டோட்டி யந்திர
மூலா வாயுவை யேற்று நன்சுழி முனையூடே-

மூதா தாரம ருப்பி லந்தர
நாதா கீதம தார்த்தி டும்பர
மூடே பாலொளி ஆத்து மந்தனை விலகாமல்;

மாலா டுனெடு சேர்த்தி தம்பெற
நாலு வேதம சாத்தி ரஞ்சொலும்
வாழ்ஞா னுபுரி யேற்றி மந்திர தவிசூடே-

மாதா நாதனும் வீற்றி ருந்திடும்
வீடே மூனொளி காட்டி சந்திர
வாகார்தேனமு தூட்டி யென்றனை யுடனுள்வாய்;

சூலாள் மாதுமை தூர்த்த சம்பவி
மாதா ராபகல் காத்த மைந்தனை
சூடோடீர்வினைவாட்டிமைந்தரெ னைமையாளுந்

தூயாள் மூவரை நாட்டு மெந்தையர்
வேளூர் வாழ்வினை தீர்த்த சங்கரர்
தோய்சா ரூபரொ டேற்றி ருந்தவ ளருள்பாலா;

வேலா ஏழ்கடல் வீட்டி வஞ்சக
மூடார் சூரரை வாட்டி யந்தகன்
வீடு டேவிய காத்தி ரம்பரி மயில்வாழ்வே-

வேதா நால்தலை சீக்கொ ளும்படி
கோலா காலம தாட்டு மந்திர
வேலா மால்மக ளார்க்கி ரங்கிய பெருமாளே.

பதவுரை

சூலாள் மாது – திரிசூலத்தை ஏந்திய அழகுடையவரும், மை தூர்த்த சாம்பவி–மைநிரம்ப எழுதிய பார்வதியாரும், மாதா–உலக மாதாவும், ரா பகல் காத்து அமைந்த அனை–இரவும் பகலும் உயிர்களைக் காத்து அமைந்த அன்னையும், சூடோடு ஈர்வினை வாட்டி மைந்தர் என எமை ஆளும் தூயாள் – சூட்டோடு சூடாய் வருத்துகின்ற வினைகளின் வலியைக் கெடுத்து அடியேங்களைப் புத்திரர் போல் ஆட்கொண்டருள்புரியும் பரிசுத்தமுடையவரும், மூவரை நாட்டும் எந்தையர் – அயன் அரி அரன் என்ற மூவரையும் நிலை நிறுத்தும் எமது பிதாவும், வேளூர் வாழ் – புள்ளிருக்கு வேளூரில் வாழ்பவரும், வினை தீர்த்த சங்கரர் – வினைகளை விலக்கி சுகத்தைச் செய்பவரும், தோய்சா ரூபரொடு-பொருந்திய வடிவுடன் கூடியவருமாகிய சிவபெருமானுடன், ஏற்று இருந்தவள் – இடபவாகனத்தில் எழுந்தருளியிருப்பவரும், ஆகிய உமையம்மையார், அருள்பாலா – பெற்றருளிய புதல்வரே! வேலா – வேலாயுதக் கடவுளே! ஏழ்கடல் வீட்டி – எழுகடல்களையுங் கலக்கி வற்றச் செய்து, வஞ்சக மூடார் - வஞ்சனையைச்செய்யும் மூடர்களாகிய, சூரரை வாட்டி, சூராதியவுணர்களை மாய்த்து, அந்தகன் வீடு ஊடு ஏவிய-இயமனுடைய வீட்டுக்குள் அனுப்பிய, காத்திரம் பரி மயில் வாழ்வே - பாரத்தைத் தாங்குகின்ற மயில்வாகனத்தின் மீது வருபவரே! வேதா நால் தலை – பிரமனுடைய நான்கு தலைகளும், சீ கொளும்படி கோலாகாலம் அது ஆட்டு - சீழ்பிடிக்குமாறு [குட்டி] ஆடம்பரத்தை வருத்தி, மந்திரவேலா – பிரணவ வடிவாகிய வேற் படையினரே! மால்மகளார்க்கு இரங்கிய பெருமாளே – திருமாலின் திருமகளாகிய வள்ளியம்மையார்க்கு இரங்கி அருள்புரிந்த பெருமிதம் உடையவரே! மூலாதாரமொடு அங்கியை ஏற்றி – மூலாதாரத்தில் மங்கிக்கிடக்கின்ற மூலாக்கினியை பிராணாயாமத்தினால்

ஒளிவிடச்செய்து, ஆறு ஆதார யந்திரமொடு ஓட்டி - ஆறு ஆதாரங்களிலும் உள்ள சக்கரங்களைப் பொருந்தச் செய்து, மூலாவாயு நன் சுழி முனையூடே ஏற்று - மூலாதாரத்தினின்று எழும் பிராண வாயுவை சுழிமுனை நாடி வழியாகச் செல்லுமாறு செய்து, மூது ஆதார மருப்பில் அந்தர - முதன்மையான ஆறு ஆதார முடிவிலுள்ள, நாத கீதம் அது ஆர்த்திடும் பரம் ஊடே - நாத கீதம் ஒலிக்கும் மேலான இடத்தில் [பிரமரந்திரத்தில்], பால் ஒளி ஆத்துமந்தனை - பால் போலும் ஒளிபொருந்திய ஆன்மாவை, விலகாமல் மால் ஆடு ஊன் ஒடு சேர்த்து இதம் பெற - நீங்காமல் பிராணவாயு இயங்குகின்ற உடம்புடன் சேர்ந்து சுகம் பெறும்படி, நானுவேதம-பலவகையான வேதாகமங்களும், சாத்திரம் சொலும்- ஞான சாத்திரங்களும் சொல்லும், வாழ் ஞானபுரி ஏற்றி - பேரானந்தப் பெருவாழ்வைத் தருகின்ற ஞானபூமியைச் சேரச்செய்து, மந்திர தவிசூடே மாதாநாதனும் வீற்றிருந்திடும் வீடே மூனுெளி காட்டி-பிரணவமந்திரபீடத்தின்மீது பராசத்தியும்பரசிவமும் எழுந்தருளியிருக்கும் வீட்டையும் சோம சூரிய அக்கினி என்ற மூன்று ஒளியையும் காட்டியருளி, சந்திரவாகு ஆர்தேன் அமுது ஊட்டி என்றனை உடன் ஆள்வாய் - சந்திரகாந்தி நிறைந்த தேன்போலும் இனிய அமுதத்தைப் பருகச் செய்து அடியேனை இக்கணமே ஆண்டருளுவீராக.

பொழிப்புரை

முத்தலைச் சூலத்தையேந்திய அழகுடையவரும், மைதீட்டிய பார்வதியம்மையாரும், உலகமாதாவும், இரவும் பகலும் உயிர்களைக் காத்து அருளும் அன்னையாரும், வெம்மையாகி வந்து துன்புறுத்தும் வினைகளின் வலிமையைக் கெடுத்து அடியேங்களைப் புத்திரர்போல் வளர்க்கும் தூய்மையானவரும், மும்மூர்த்திகளையும் நிலைநிறுத்தும் எமது பிதாவும் வைத்தீச்சுரன் கோயிலில் வாழ்பவரும் வினைகளை விலக்கி சுகத்தைச் செய்பவரும் பொருந்திய வடிவுடன் கூடியவருமாகிய சிவமூர்த்தியுடன் விடையின்கண் எழுந்தருளியிருப்பவருமாகிய உமையம்மையார் பெற்ற திருக்குமாரரே! வேலாயுதரே! எழுகடல்களையும் வற்றச்செய்து, வஞ்சகமுடைய மூடர்களாகிய சூராதியவுணர்களை மாய்த்து எமபுரத்திற்கு அனுப்பிய சுமையைத் தாங்கும் மயில் வாகனரே! பிரமதேவனுடைய நான்கு தலைகளும் சீழ்கொளும்படி குட்டி அவனது ஆடம்பரத்தை யகற்றிய மந்திரவடிவாகிய வேற்படையுடையவரே! திருமாலின் புதல்வியாகிய வள்ளியம்மையாருக்கு இரங்கி

யருள்புரிந்த பெருமிதமுடையவரே! மூலாதாரத்தில் மங்கிக் கிடக்கும் மூலாக்கினியை பிராணயாமத்தால் ஒளிவிடச் செய்து, அதனை ஆருதாரங்களிலும் உள்ள சக்கரங்களைப் பொருந்தச் செய்து, மூலாதாரத்தினின்றும் எழுகின்ற வாயுவை சுழிமுனை நாடிவழியே செலுத்தி, முதன்மையான ஆறு ஆதாரங்களின் முடிவில், நாதகீதம் ஒலிக்கும் மேலான இடமாகிய பிரமரந்திரத்தில், பால்போன்ற ஒளியுடன் கூடிய ஆன்மாவை, பிராணவாயுதொடர்ந்து இயங்கும் உடம்புடன் சேர்த்து சுகம் பெறும்படிச்செய்து, சகலகலைகளும் கூறும் பேரானந்தப் பெருவாழ்வைத் தருகின்ற ஞானபூமியைச் சேரச்செய்து, மந்திரபீடமேல் பார்வதி பரமேச்சுரர் எழுந் தருளியுள்ள முத்திவீட்டையும், சூரிய சந்திர அக்கினி என்ற மூன்று ஒளியையுங்காட்டி, சந்திரகாந்தி நிறைந்த தேன் போன்ற இனிய அமுதத்தைப் பருகச் செய்து, அடியேனை இக்கணமே ஆண்டருளுவீராக.

விரிவுரை

மூலாதாரமொ டேற்றியங்கியை:—

மூலாதாரம் எருவிடுவாசலுக்கும் கருவிடுவாசலுக்கும் இடையில் உள்ளது. அங்கேயுள்ள மூலாக்கினியை நன்கு யோகசாதனத்தினுல் ஒளிவிடச் செய்தல் வேண்டும்.

"மூலாதாரத்தில் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறிவித்தும்" —ஔவையார்.

ஆருதாரமொ டோட்டியந்திர:—

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும், 4, 6, 10, 12, 16, 2 இதழ்களோடு கூடிய சக்கரங்கள் உண்டு. அவைகளில் முறையே விநாயகர், அயன், அரி, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் என்ற ஆறு மூர்த்திகளும் எழுந்தருளியிருப்பர்; இந்த ஆறு ஆதாரமூர்த்திகளுந் தாமே என்பதை முருகவேள் தமது ஆறு முகங்களால் விளக்குகின்றனர்.

"வாரணமுகவன் மலரோன் திருமால்
வருத்தமில் உருத்திரன் மகேச்சுரன் சதாசிவன்
உருத்தெளிந்திட நம் உருவேயாகும்

ஆறுமாமுகத் தமர்ந்ததும் இதுவே
வேறிலை யென்று மெய்ம்மொழி செப்பி''

—சிற்றம்பலநாடிகள்

மூலாவாயுவை யேற்று நன் சுழிமுனையூடே:—

இடை பிங்கலை என்ற இரண்டு நாடி வழியாகச் சென்று மீளும் பிராணவாயுவை, அவைகளில் செல்லவிடாமல் மடை மாற்றி, முதுகுதண்டின் இடையே தாமரைத் தண்டின் நூல் போல் மென்மையாகவுள்ள சுழிமுனை என்ற வெள்ளைநரம்பின் வழியாக ஏற்றவேண்டும்.

''நாடி யோர்பத்தும் நாடி நாடிகள்புக்
கோடியவாயு ஒருபதுந் தேர்ந்து
சொன்னநாடிகளிற் சுழிமுனை நடுவாய்
இன்னதின்பக்கத் திடைபிங்கலையாம்
அக்கினி திங்கள் ஆதவன் கலைகள்
புக்கசக்கரமும் போய் மீண்டியங்கும்
மூலகுண்டலியாம் உரக மூச் செறிந்து
வாலது மேல்கீழ் மண்டல மிட்டுப்
படந்தனைச் சுருக்கிப் படுத்துறங்குவது
நடந்துமேல் நோக்கி ஞான வீடளிக்கும்
மண்டலமூன்றும் மருவுதூண் புகவக்
குண்டலியெழுப்புங் கொள்கையீ தென்றான்''

மூதாதார மருப்பிலந்தர:—

மூது-முதன்மை, அந்தரம்-முடிவு. மருப்பில் என்றது மருப்பில் என்று நீட்டல் விகாரம் சந்தத்தை நோக்கிப் பெற்றது.

ஆறு ஆதாரங்களே உடம்பில் முதன்மை பெற்றனவாம். அவைகளில் முடிவில் உள்ள பிரமரந்திர வழியாகச் சென்றால் அங்கே தசவித நாதகீதங் கேட்கும்.

பாலொளி ஆத்துமந்தனை:—

பால் போன்றதும் பளிங்குபோன்றதும் ஆகிய ஆன்மா பரிசுத்தமானது. அது ஆணவத்துடன் சேர்ந்து அழுக்குற்றது. அதனை ஆணவஅழுக்கை நீக்கி தன்னியல்பைப் பெறச்செய்தல் வேண்டும்.

நாலுவேதம சாத்திரம்:—

வேதாகமம் என்றது வேதமம் என மருவியது.

சந்திரவாகார் தேனமுதூட்டி யென்றனை யுடனுள்வாய்:—

மூலாதாரத்தில் உள்ள மூலக்கனலை யெழுப்பியவுடன் அது ஆறு ஆதாரங்களையுங் கடந்துசென்று, மதிமண்டலத்தை வெதுப்ப, முழுமதியுருகி சோம ரசம் பெருகும். அதனை உண்டு பசிதாக மின்றி யிருப்பர் சிவயோகிகள்.

"மூலமே முதலா முதல் நடுவுச்சி
பாலளவினுநீள் படுதுணை நோக்கி
மூலாதாரத்தின் முச்சுழிச்சுடரை
மேலாதாரத்தின் மெல்லெனத் தூண்டி
இருவழிக்காலும் ஒருவழி நடத்திக்
கருவழியடைத்து கமலம் ஆறுருவிப்
பன்னிரண்டந்தம் பருதியுமதியும்
மன்னியொன்றான வண்ணமுந் தெரிந்து
கமடம் ஐந்தடக்கும் கருத்தெனப் பொறியில்
மமதைகள் அடக்கி மனோலயமாக்கி
மூலக்கனலால் முழுமதியுருகிப்
பாலைப்பருகும் பண்புதந்தருளி" —சிற்றம்பலநாடிகள்.

சூலாள்:—

அம்பிகையின் திருக்கரத்தில் விளங்குவது திரிசூலம். அது இச்சாசக்தி கிரியாசக்தி ஞானசக்தி என்ற முச்சக்தி வடிவானது.

மாது:—

மாது—அழகு. அழகின் இருப்பிடம் அம்பிகை.

சூடோமர் வினைவாட்டி:—

தன்னை வழிபடும் அடியவர்களை வந்து மிகுந்த வெப்பமாக வருத்தும் வினைகளை விலக்கி அருளன்னை அருள்புரிவர்.

வேளூர்:—

வேள்-உபகரிப்பவர். ஆன்மாக்களுக்கு மெய்ஞ்ஞானத்தைத் தந்து உபகரிப்பவர் முருகவேள். அவர் பூசித்த திருத்தலம் ஆதலின் வேளூர் எனப்பெற்று, மேலும், சம்பாதி சடாயு என்ற புட்களும், இருக்கு என்ற வேதமும் வழிபட்டதனுல் புள்ளிருக்கு வேளூர் எனப்படும். இப்போது வைத்தீச்சுரன் கோயில் என்று வழங்குகின்றது.

ஏற்று இருந்தவள்:—

ஏறு-இடபம். சிவமூர்த்தியுடன் இடபவாகனமீது இருக்கின்றவர்.

காத்திரம் பரி மயில்:—

காத்திரம்—சுமை; பரித்தல்-தாங்குதல்; மிகுந்தசுமையைத் தாங்கும் வன்மையுடைய மயில்.

வேதா நால்தலை சீக்கொளுப்படி:—

செருக்குடன் சென்ற படைப்புத் தலைவனுகிய பிரமதேவனை அழைத்து, அவன் செருக்கு நீங்க, நிமிர்ந்த தலைகள் வணங்குமாறு குமரவேள் குட்டி சிறை செய்தனர். அக்குட்டினுல் அவன் தலையில் சீழ் பிடித்தது.

அகங்காரத்தினுல் அயன் அடைந்த நிலை இது எனில் ஆன்மாக்களாகிய நாம் அகங்காரம் அடைந்தால் அடையும் நிலை எது என்பதை ஊகித்து உணர்ந்து உய்வு பெறுக.

கருத்துரை

பார்வதிபாலரே! சூரசங்காரரே! புள்ளிருக்கு வேளூரில் மேவிய புனிதரே! சிவயோகத்தில் அடியேன் நின்று உய்வுபெற அருள்புரிவீர்.

—:—

உ

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம்

திருநாவுக்கரசு நாயனார் புராணம்

(உஅ௩-வது பக்கத் தொடர்ச்சி)

திருமறைக் காட்டில் திருக்கதவந்திறத்தல்

திருநாவுக்கரசு சுவாமிகள் ஏனைய திருத்தலங்களையுந் தரிசிக்க விரும்பினார். திருவீழிமிழலைத் தேவரிடம் பிரியா விடைபெற்று, திருஞான சம்பந்தருடன் அடியார்கள் புடை சூழத் திருவாஞ்சியம் முதலிய திருப்பதிகளைத் தரிசித்துக் கொண்டு திருமறைக்காட்டின் எல்லையை யடைந்தனர். நறு மணங் கமழும் புன்னை மலர்ச் சோலை சூழ்ந்த உப்பளங்களின் முன்றில் தோறும் சிறுமியர்கள் முத்துக்களைக் கொழிக்கும் வளமையுடைய வேதவனத்தில் விடையவர் எழுந்தருளிய திருக்கோயில் சென்று வலம் வந்து இருபெருமக்களும் எம்பிரான் திருமுன் சென்றார்கள். மணிகண்டரை முன்னே மறைகள் பூசித்து திருக்காப்பிட்ட கதவம் அந்நாள்முதல் இந்நாள் வரை அடைத்தபடியேயுள்ள திருவாயிலை யடைந்தார்கள்.

பழைமையாகிய வேதங்கள் திருக்காப்பிட்ட திருவாயிலைத் திறக்க வல்லார் ஒருவரும் வாராமையால், அருகில் உள்ள ஒருவழியே சென்று அன்பர்கள் அரனை வழிபட்டுவந்தார்கள். இச் செய்தியை நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் கேட்டு அறிந்தார்கள். தோணிபுரத்தோன்றலாம் சம்பந்தப்பிள்ளையார், "அப்பரே! வேதங்கள்பூசித்த விமலரை நாம் இருவரும் நேர்வாயிலிற் சென்று வணங்குதற்பொருட்டு, திருக்கதவந் திறக்கப் பாடியருளுவீராக" என்றார்.

அன்பின் பெருக்கால் காழி மன்னர் கூறக்கேட்டு கல்மிதப்பில் அணைந்த வாக்கின் வேந்தர் பாடுவாராயினார்.

பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினார்வலஞ்செய் மறைக்காடரோ
கண்ணினாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே,

பண்ணின் பயன் துய்க்கும் பரமர் பத்து பாடல் பாடியும் கதவந் திறக்கத் தாழ்த்தபடியால் அப்பரடிகள் திருக்கடைக் காப்பாக அடியில் வரும் திருப்பாடலைப் பாடியருளினார்.

அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்க மொன்றிலீர் எம்பெருமானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக்காடரோ
சரக்க விக்கதவந் திறப்பிம்மினே.

வேதவனப் பெருமான் திருவருளால் மணிக் கதவின் தாள் நீங்கித் திறந்தது. மொழிக்கு முதல்வராகிய அப்பர் ஞானக்கன்றுடன் தொழுது விழுந்து பணிந்தார். தேவர்களது ஆர்ப்பொலியும் வேதவொலியும் கடல் ஒலியினும் மிகுதியாக வொலித்தன. அடியார்கள் மகிழ்ந்தார்கள். இரு திருவாளர் களும் உட்புகுந்து இன்ப வெள்ளத்தில் மூழ்கி அன்பு மேலிட என்பு உருகி இறைவரைப் பணிந்து மொழிமாலை சாத்தி புறத்துவந்தார்கள்.

வாகீசர் திருஞானசம்பந்தரை நோக்கி, "இறைவரருளால் இத் திருக்கதவம் திறந்தும் அடைத்தும் வழி திருந்தும்படி தாங்கள் கதவம் அடைக்குமாறு பாடியருளும்" என்றார். சிவ ஞானமுண்ட சீகாழிப்பிள்ளையார் பதிகம்பாட எடுத்தவுடனே முதற்பாட்டிலேயே கதவம் திருக்காப்பிட்டது. அந்த அதி சயத்தைக் கண்ட அடியார்கள் அனைவரும் அளவற்ற மகிழ்ச்சி யுற்று, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து சமானமில்லாத இரு குருமூர்த்திகளது திருவடிகளையுந் தொழுதார்கள். திருஞான சம்பந்தர் பதிகத்தை முடித்துப் பணிந்தனர். அதுமுதல் இறை வர் திருமுன்னுள்ள அத்திருவாயில் திறக்கவும் அடைக்கவு மாக நிலவியது. அரசும் கன்றும் திருமடத்தை யடைந்தார்கள்

வாய்மை திறம்பாத வாகீசர் திருமடத்தில் ஒருபுறம் படுத்தும், தாம் அரிதின் முயன்று பாடத் திருக்கதவந் திறந்த தையும், சம்பந்தர் எளிதிற்பாட அடைபட்டதையும் எண்ணி இறைவர் திருவுளம் அறியாது அயர்ந்தேன் என்று மனங் கவன்று, அச்சத்துடன் கண்மூடி அறிதுயிலில் அமர்ந்தார். வேதவனம்மேவும் விடையவர் பொன்னார் மேனியில் வெண் ணீறு பொலியத் திருவுருக்காட்டி, "வாய்மூரில் இருப்போம்; வா" என்று அருளி மறைந்தனர்.

வாகீசப்பெருந்தகை துணுக்குற்று எழுந்தனர். இறைவர் தனது கனவில் தோன்றி வாய்மூருக்குவருக என்ற அருள் திறத்தை உன்னி உருகினர்.

எங்கே யென்னை இருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாளம் அருளினர்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனர்
அங்கே வாவென்று போனர் அதென்கொலோ.

மன்னுமாமறைக் காட்டு மணாளனர்
உன்னி உன்னி உறங்கு கின்றேனுக்குத்
தன்னை வாய்மூர் தலைவனுமாசொல்லி
என்னை வாவென்று போனர் அதென்கொலோ.

என்று பாடினர். "இது எம்பெருமான் திருவருளானல் யானும் போவேன்" என்று எழுந்தார். திருமறைக்காட்டை விட்டுப் புறப்பட்டு விரைந்து போகின்றர். முன் காட்டிய திருக்கோலத் துடன் ஆதிமூர்த்தி அவர் முன் தோன்றினர். அப்பர் அவரைத் தொடர்கின்றர். ஆனல் அவரை அடையப் பெற்றாரில்லை. அன்பினல் நிறைந்த அமுதம் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல் ஆயிற்று. எதிரில் பொன்வண்ணமான திருக்கோயில் ஒன்று தோன்ற அதில் புகுந்து இறைவர் மறைந்தனர். இவ்வாறு அப்பரடிகள் சென்றதைக் கேட்ட பாலறுவாயர் விரைந்து வந்தனர். அப்பர் "ஐயனே! அழைத்து வந்து மறைந்தீரே! சமயமறியாது கதவைத் திறப்பித்த அடியேனுக்கு ஒளித்தது சரி. திருத்தொண்டின் வலிமையால் பாடி அடைப்பித்த சிவஞானப்பிள்ளையார் இங்கு வந்துள்ளார். அவருக்கு இனி தோன்றுது மறைவது முறையோ?" என்று வேண்டினர். உடனே நம்பர் சம்பந்தருக்குக் காட்சியளித்தனர். பரமனைக் கண்டு பணிந்து, "அப்பரே! ஐயனைப்பாரும்" என்று காட்டினர் காழிவேந்தர். கண்ணுதலைக் கண்ட அண்ணல் பாடுவார்.

பாட அடியார் பரவக்கண்டேன்
பத்தர் கணங் கண்டேன் மொய்த்தபூதம்
ஆடல் முழவம் அதிரக்கண்டேன்
அங்கை யனல் கண்டேன் கங்கையாளைக்
கோட லரவார் சடையிற் கண்டேன்
கொக்கின் இதழ் கண்டேன் கொன்றை கண்டேன்
வாடற்றலை யொன்று கையில் கண்டேன்
வாய்மூரடிகளை நான் கண்டவாறே.

பின்னர் குறுக்கையர் குடியில் தோன்றிய அப்பர்கோவும் கவுணியர் குடியில் தோன்றிய இளங்கோவும் திருவாய்மூரை யடைந்து, திருக்கோயிலை வலம்வந்து வாய்மூர் வள்ளலை வணங்கித் திருப்பதிகம் பாடித் துதித்தார்கள். சிலநாள் அங்கு தங்கி, பின் திருமறைக்காட்டிற்கு வந்து பரமனைப் பணிந்தார்கள்.

பிள்ளையார் மதுரைக்குப் புறப்படுதல்

இவ்வாறு இரு மாதவசீலர்களும் வேதாரணியத்தில் தங்கியிருக்கும்போது, மதுரையில் பாண்டிமாதேவியார் மங்கையர்க்கரசியாரும், மந்திரியார் குலச்சிறையாரும் விடுத்த தூதர் திருஞானசம்பந்தப் பெருமானைக் காண வந்தனர். வாயில் காப்போர் மூலம் தமது வரவையறிவித்து அனுமதி பெற்று, திருமடத்துக்குள் சென்று, திருஞானசம்பந்தரது திருவடியில் வணங்கி நின்றனர். ஞானபோனகர், "தீங்குளவோ?" என்று அன்புடன் வினவினர். வந்தவர்கள், "ஐயனே! உலகம் உய்ய வந்த உமது உபய சரணாரவிந்தங்களை நினைவார்க்கு தீங்கு வருமோ? ஒருபோதும் வராது. வைதிக சைவநெறியை விடுத்து சழக்கு நெறியை யடுத்த பொய் உள்ள சமணர்கள் புரியும் கொடுமைகளை இனி எங்களால் பொறுக்க முடியாது. தேவரீர் அங்கு எழுந்தருளுதல் வேண்டும்" என்று விண்ணப்பம் புரிந்தார்கள். சம்பந்தர், "அந்தச் சமணரது பொய்ந் நெறியை மாற்றி சைவ மெய்ந்நெறியை ஏற்றி இடர் களைவோம்" என்று தெய்வத் திருநீற்றை நினைந்து எழுந்தார்.

உடனே வாகீசர் தடுத்து, "பிள்ளாய்! தூய்மையும் வாய்மையும் இல்லாத சமணர்கள் சாலவும் மாயையில் வல்லவர்கள். அவர்கள் எனக்குச் செய்த தீயனவும் பல. ஆதலின் நான் உம்மை அங்கு செல்ல இசையேன்" என்றனர். பிள்ளையார் வாகீசரை நோக்கி, "அப்பரே! எல்லையில்லாத அன்புடன் திருநீற்றைப் போற்றும் இருவரையுஞ் சென்று காண விரும்புகின்றேன். அன்றியும் அங்கு தீமைபுரியும் சமணரது தருக்கை யடக்கி சைவத்தை நிலை நாட்டாது இனி ஒன்றுஞ் செய்யேன். உமது ஆணை" என்றனர். அப்பரடிகள், "நாளுங் கோளும் நன்னிலை யில்லை" என, கவுணியர்கோன் கோளறுபதிகம் பாடி, "தேவரீர் இரும்; அடியேன் ஒருவன் சென்றாலே அமையும், பரசமய இருளை நீக்கி சைவசமய ஒளியையேற்றி வருவேன்" என்று கூறிப் புறப்பட்டுச் சென்றனர். ஆண்ட அரசு மறுக்க முடியாது இருந்தனர்.

திருத்தல யாத்திரை

சீகாழிப் பிள்ளையார் சென்றபின் அப்பரடிகள் சில நாள் வேதாரணியத்தில் தங்கி திருப்பணி செய்தனர், திருப்பதிகங்கள் பாடியருளினூர்.

கால்கொடுத் திருகை யேற்றிக்
　　கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீரால்
　　சுவரெடுத் திரண்டுவாசல்
ஏல்வுடைத்தா அமைத்தங்
　　கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார்
　　மாமறைக் காடனூரே.

மீண்டும் திருவீழிமிழலை மேவும் தேவதேவரைச் சேவிக்க விரும்பினூர். மறைக்காட்டையரது திருவருள் பெற்றுப் புறப்பட்டனர். திருநாகைக்காரோணஞ் சென்று இறைவனை நிறைந்த அன்புடன் வழிபட்டுத் திருப்பதிகங்கள் பாடினூர்.

தெற்றினர் புரங்கள் மூன்றும் தீயினில் விழவோரம்பால்
செற்றவெஞ்சிலையர் வஞ்சர் சிந்தையுட் சேர்விலாதார்
கற்றவர் பயிலு நாகைக் காரோணங் கருதியேத்தப்
பெற்றவர் பிறந்தார் மற்றுப் பிறந்தவர் பிறந்திலாரே.

தூமென் மலர்க்கணை கோத்துத்தீ வேள்வி தொழிற்படுத்த
காமன் பொடிபடக் காய்ந்த கடனாகைக் காரோண நின்
நாமம் பரவி நமச்சிவாய என்னும் அஞ்செழுத்தும்
சாமன்றுரைக்கத் தருதி கண்டாய் எங்கள் சங்கரனே.

அங்கிருந்து திருவீழிமிழலை சென்று, நாராயணமூர்த்தியால் விண்ணினின்றும் இழிந்த திருக்கோயிலினுள் வாழும் சிவமூர்த்தியை வழிபட்டு, வேறு பல தலங்களையும் தரிசிக்க விரும்பினூர். காவிரி நதியின் கரைவழியே சென்று திருவாவடுதுறையை யடைந்தார். அங்கு திருஞானசம்பந்தருக்கு, அவருடைய பிதாவின் வேள்வியின் பொருட்டு அரனூர் ஆயிரம் பொன் உலவாக்கிழியருளிய திறத்தை வியந்து பாடினூர்.

மாயிரு ஞாலமெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமலவூரர்க்கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனூரே.

பழையாறையில் உண்ணுவிரதம்

திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டுச் செல்லும்வழியில் பழையாறையைக் கண்டார். அங்கு சமணர்கள் மறைத்துள்ள வடதளியில் மேவும் மணிகண்டரைக் கைகூப்பித் தொழுதனர். அது சமணர்கள் பொய்ம்மையாகச் செய்த விமானம் என்று அங்குள்ளார் சொல்லக் கேட்டு மிகவும் வருந்தினர். அந்த விமானத்தின் அருகில் ஒரு இடத்தில் அமர்ந்து, சிவபெருமான் திருவடியைச் சிந்தித்து ''எம்பெருமானே! மந்தபுத்தியை யுடைய சமணர்கள் வஞ்சனையால் உமது திருவுருவை மறைத்த தீமையை அகற்றி, சமணரது திறத்தை அழிப்பீர்; ஐயனே! உமது திருவுருவங் கண்டாலன்றி இவ்விடம் விட்டு அகலேன்'' என்று வேண்டினர். தமது கருத்து முடியும்வரை உண்ணுவிரதம் மேற்கொண்டனர்.

கருணைக்கடலாகிய கண்ணுதற் கடவுள், அரசனுடைய கனவில்தோன்றி, ''அறிவில்லாத அமணர்கள் நம்மை மறைக்க நாம் உள் இருந்தோம். திருநாவுக்கரசன் நம்மைக் கும்பிடும் பொருட்டு சமணரை யழித்து அகற்றுவாய்'' என்று மறைத்துள்ள இடத்தையும் அடையாளத்துடன் கூறியருளினர்.

மன்னன் கனவு தெளிந்து எழுந்து, சிவமூர்த்தியின் கட்டளையை நினைத்து கரங்களைக் கூப்பித் தொழுதான். அமைச்சர்களுக்கு இறைவனுடைய ஆணையை யறிவித்து, அமைச்சராதியோர் புடைசூழச் சென்று, எம்பிரான் அருளிய அடையாளத்தின் வழியைக் கண்டு, வாகீசப்பெருமானை அடிபணிந்து ஆங்கு குவிந்திருந்த அமணர்களை ஆனையினத்தினை விடுத்து அமணர் ஆயிரம் பேரையும் துகைப்புண்ணச் செய்து தூரறுத்தான். சமணர் மறைத்த மறைப்பை நீக்கி, விடையவருக்கு விமானம் புதுக்கி, நித்திய நைமித்திகங்கட்கு ஏராளமான நிலபுலங்களை விடுத்து வணங்கினன். திருநாவுக்கரசரும் இறைவனைக் கண்டு களித்து இனிய பதிகம் பாடித் துதித்தனர்.

தலையெலாம் பறிக்குஞ்சமண் கையருண்
ணிலையினுன் மறைத்தான் மறைக்கொண்ணுமோ
அலையினார்பொழி லாறை வடதளி
நிலையினனடியே நினைந்துய்ம்மினே.

பின்னர் காவிரிக்கு இருமருங்கிலும் உள்ள திருப்பட்டீச்சுரம், ஆறைமேற்றளி, திருவலஞ்சுழி, திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, தென்குடித்

திட்டை, திருப்புள்ளமங்கை, திருச்சக்கரப்பள்ளி, திருவையாறு, திருநெய்த்தானம், திருஆலம்பொழில், திருப்பெரும்புலியூர், திருமழபாடி, திருப்பழூர், திருக்கானூர், திருஅன்பிலாலந்துறை, திருமாந்துறை, திருப்பாற்றுறை முதலிய திருத்தலங்களையெல்லாம் தெரிசித்து, ஆங்காங்கு முக்கட்பரமனுக்கு மொழிமாலை புனைந்து, உழவாரப்படையினால் காயத்தொண்டும் புரிந்துகொண்டு அடியார்கள் எதிர்கொள்ள திருவானைக்காவை அடைந்தார்.

காவிரியில் முழுகி, செழுநீர்த்திரளாகிய சிவமூர்த்தியைத் தெரிசித்தார். சிலந்திக்கு அருள்புரிந்த திருவருள்திறத்தினைப் புகழ்ந்து பாடினார்.

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர்நல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லாநிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடுபொன்னித்
திருவானைக்காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய்கேனே.

கட்டமுது பெறுதல்

அங்கிருந்து புறப்பட்டு, திருஎறும்பியூர், அழகிய திரிச்சிராப்பள்ளி, திருக்கற்குடி, திருப்பராய்த்துறை, திருஆலந்துறை, திருச்செந்துறை முதலிய புண்ணிய தலங்களை யடைந்து வண்டமிழ் பாடி வழிபட்டு, காவிரியைக் கடந்து வடபால் உள்ள திருப்பைஞ்ஞீலியைத் தரிசிக்கும்பொருட்டு செல்லுவாராயினார்.

வழிநடந்து வாகீசர் இளைத்து வருந்தினார். பசியுந்தாகமும் வந்து நெருக்கின. அவைகளைப் பொருள்படுத்தாது நடந்து திருப்பைஞ்ஞீலிக்கு அருகில் சேர்ந்தனர். அண்டர்நாயகன் தொண்டர் நாயகரது பசிதாகத்தைமாற்றி அருள்புரியக் கருதினார். பூங்காவும் திருக்குளமும் வழியில் உண்டாக்கி செந்தண்மை பூண்ட அந்தணர் வடிவுகொண்டு மதிசூடிய பரமர் பொதி சோறு கொண்டு திருத்தாண்டக வேந்தரை எதிர் நோக்கியிருந்தனர். மாலும் அயனும் கீழும் மேலும் தேடியுங் காணமுடியாத அண்ணலை வாகீசர் அடைந்தார். அந்தணராகியுள்ள எந்தையார் "அன்பரே! நீர் நடந்து வந்து வருந்தி

யிருக்கின்றீர். இதோ என்பால் உள்ள பொதி சோற்றை யுண்டு, இக் குளத்தின் தண்ணீரைப் பருகி இளைப்பாறிப் போவீராக" என்று கூறியருளினார். நாவுக்கரசர் நம்பர் திருவருள் என்று எண்ணி, வேதியர் தந்த பொதிசோற்றையுண்டு இனிய தண்ணீரைப்பருகி தளர்வு நீங்கினார்.

மெலிவுநீங்கிய மெய்யன்பரை மறையவர்நோக்கி 'நீர் எங்கு போகின்றீர்?' என்று வினாவியருளினார். "அடியேன் திருப் பைஞ்ஞீலிக்குப் போகின்றேன்" என்றனர். இறைவர் "அந்த ஊருக்குத்தான் நான் போகின்றேன்" என்று கூறி வாகீசருடன் சென்றார். திருப்பைஞ்ஞீலிக்கு அருகில் வந்தவுடன் வேதியராகவந்த விடையவர் மறைந்தருளினார். அப்பரடிகள் "ஆ! கெட்டேன். மாலுமயனுங் காணாத மணிகண்டர் அடியேனைப் பொருளாக எண்ணி காவுங்குளமும் அமைத்துப் பொதிசோறு தந்த கருணைதான் என்னே? என்னே?" என்று பாடி மண்ணில் வீழ்ந்து எழுந்து கண்ணீர் மழை பொழிந்தனர். திருக்கோயிலுக்குள் சென்று நெற்றிக் கண்ணுடைய நிமலனை வணங்கினார். அளவற்ற காதலுடன் தமிழ் மாலைகள் பாடி, கையினால் திருத்தொண்டுபுரிந்து அங்கு சில நாள் தங்கியிருந்தார்.

அன்புவடிவாய அப்பமூர்த்திகள் அங்கிருந்து புறப்பட்டு, இறைவர் எழுந்தருளியுள்ள திருமலைகளையும், திருப்பதிகளையும் வணங்கி செந்தமிழ்ப்பதிகங்கள்பாடி, வடபால் நோக்கி திருவண்ணாமலையை யடைந்தார். மலையைக்கண்டவுடன் மண்மிசை வீழ்ந்து வணங்கி, மலையை வலம்வந்து, கரையில்லாத காதலுடன் அருணாசலேச்சுரரை வழிபட்டனர். வீட்டின்பத்தினும் மேலான இன்பத்தை யடைந்தார். பைந்தமிழ்மாலை பாடினார்.

தொண்டைநாடு

திருத்தாண்டகவேந்தர் சில நாள் சென்றபின், தொண்டை நன்னாடு சென்று ஆங்குள்ள சிவ தலங்களைத் தரிசிக்க விரும்பினார். காடும் மலையுங் கான்யாறுங் கடந்து சிறந்த தெய்வ நலம் பொருந்திய தொண்டை நன்னாட்டினை யடைந்து, பூஞ்சோலைகள் சூழ்ந்த திருவோத்தூரைச் சேர்ந்தார். சேய்நதியில் முழுகி திருக்கோயிலை வலம் வந்து, கண்ணீர் பொழிந்து, இறைவனை வணங்கி திருத் தாண்டகங்கள் மொழிந்து பணிசெய்தனர். அருகிலுள்ள அருமைப்பதிகளை வணங்கிக்கொண்டு, தையல்

தழுவக் குழைந்தபிரான் தங்கும் தெய்வப்பதியென்று வையமுழுதும் தொழுதேத்தும் மதில்சூழ் காஞ்சிப்பதியணைந்தார். "உலகம் உய்ய இறைவர் சூலை தந்து ஆட்கொண்ட வாகீசரை வரப்பெற்றோம்" என்று கதிரவனைக் கண்ட கமலம்போல் கச்சியம்பதியில் உள்ள அன்பர்கள் களித்து, வாயில்கள் தோறும் மணித்தோரணங்கள் கட்டி, வாழைக் கமுகுகள் நாட்டி, பூரணகும்பம் வைத்து, திருவிளக்குகள் ஏற்றி, மலர்ப் பந்தரிட்டு, விடைக் கொடிகளைப் பறக்கவிட்டு நகரை யலங்கரித்தார்கள். உழவாரப்படை ஏந்திய உத்தமரை எதிர் கொண்டு வணங்கினார்கள். அப்பரும் அவர்களை வணங்கினார். நகருக்குட் சென்று, திருக்கோயிலை யடைந்து திருவாயிலைத் தொழுது தழுவக் குழைந்த தயாபரனைக் கண்டு விண்ணருவி யென்னக் கண்ணருவி பெருக, புளகம் பொங்க, மண்மிசை வீழ்ந்து எழுந்து தமிழ்ப்பதிகம் சாத்தி வழிபட்டார். கச்சி மயானம், கச்சித்திருமேற்றளி முதலிய திருக்கோயில்களையுந் தெரிசித்து பலப்பல பதிகம் பாடினார்.

காஞ்சியில் திருத் தொண்டுகள் புரிந்து, அங்கிருந்தபடியே, திருமாற்பேறு, திருவூறல் முதலிய தலங்களைக் கண்டு வணங்கி மகிழ்ந்து திருப்பதிகங்களை மொழிந்தார். திருக்கழுக் குன்றஞ் சென்று வேதங்கள் பூசித்த வேதகிரீச்சுரரை வணங்கினார். கடற் கரையில் விளங்கும் திருவான்மியூரை யடைந்து மருந்தீசரை வழிபட்டு, மருவார் மலர்சோலை மயிலாப்பூர் சென்று கபாலீசரைத் தொழுது; திருவொற்றியூர் சென்று படம்பக்கநாதரை வணங்கினார். அடியார்கள் பலர் அப்பரடிகளை வரவேற்று மகிழ்ந்தார்கள். திருவொற்றியூர் வாழும் எழுத்தறியும் பெருமானைப் பல தமிழ்ப்பதிகங்கள் பாடிப் பரவினார்.

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகடலோடும் போது
மதனெனும் பாறைதாக்கி மறியும் போதறியவொண்ணு
உனையுனும் உணர்வைநல்காய் ஒற்றியூர் உடையகோவே.

திருமுல்லை வாயில் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பாசூர் சென்று திருப்பதிகங்கள் பாடி வழிபட்டனர். பழையனூர்த் திருவாலங்காடு போய் ஊர்த்துவ தாண்டவஞ் செய்யும் அருட்கடலைத் தொழுதார். வடதிசை நோக்கிச் சென்று வழியில் உள்ள திருக்காரிகரை முதலிய தலங்களைத் தரிசித்து திருக்காளத்திமலையைச் சார்ந்தார். பொன்முகலி

உ

முருகா

கற்பு

—: கோதை :—

"விளைகின்ற பயிர் முளையிலே" யென்றபடி கோதை, இளமையிலிருந்தே நற்குணங்களை யுடையவளாக இருந்தாள். அவள் முகத்தில் அழகு ஒழுகும். அவள் சிரிப்பில் தனிக் கவர்ச்சியுண்டு. மெருகிட்ட தங்கச்சிலைபோல் விளங்கினாள். குடும்பத்தில் வேறு குழந்தைகள் இல்லாமையால், மிகவும் செல்வமாக வளர்ந்தாள். எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பாள். பள்ளிக்கூடத்தில் அவளுக்கு நல்லபேர். பாடம் முடிந்தவுடன் ஏனைய பிள்ளைகளுடன் சேராமல் அடக்கமாகவும் ஓரமாகவும் நடந்து வீட்டிற்கு வருவாள். ஆசிரியருக்கு அவளிடம் தனி அன்பு. நல்ல குழந்தைகளைக் கண்டால் யாருக்குத்தான் அன்பு நிகழாது?

அந்த ஊருக்கு அருகில் ஓடும் நதியில் ஒரு நாள் குளித்துக் கொண்டிருந்த கோதை எப்படியோ தண்ணீரில் நழுவி விட்டாள். ஓடுகின்ற நதி பெண்ணென்று அவளிடத்தில் இரக்கங்

நதியில் முழுகி மலைமிசையேறி காதலுடன் வேதநாயகரைக் கண்டு கண்ணுங் கருத்தும் களித்து, மெய்மறந்து பாடினார். ஆடினார். கண்ணுதற் பெருமான் அருகில் நிற்குங் கண்ணப்ப நாயனாரது பாத மலர்மீது வீழ்ந்து வணங்கினார். இனிய தமிழ்ப்பதிகங்களை யோதினார்.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்
காளத்தியான் அவன் என்கண்ணுளானே,

சிலநாள் அங்கிருந்து திருத்தொண்டுகள் புரிந்தனர்.

(தொடரும்)

காட்டுமா? தண்ணீரில் உருண்டுகொண்டு கோதை தத்தளித்துக் கொண்டு செல்லுகின்றுள். அவளைக் கண்டு இரங்கி ஓலமிடுவது போல் நதிக்கரையில் உள்ள தவளைகளும் நாரைகளும் சத்தமிட்டன.

கிழக்கே உள்ள துறையில் கோபாலன் நீரில் நீந்தி விளையாடிக்கொண்டிருந்தான். அவன் தண்ணீரில் மிதந்துவரும் கோதையைக் கண்டு திடுக்கிட்டான். உடனே மிகுந்த ஆற்றலுடன் அவளுடைய கூந்தலைப் பற்றி இழுத்துக் கரையில் சேர்த்தான். நாசியில் கைவைத்து உயிர் நீங்கவில்லை யென்று அறிந்து மகிழ்ந்தான். நல்ல சிகிச்சைகளைச் செய்தான். கோதை கண் விழித்தாள். கோபாலனுக்கு அளவற்ற ஆனந்தம் உண்டாயிற்று. தான் ஒரு உயிரைக் காப்பாற்றியதாக நினைந்து ஆறுதல் அடைந்தான். கோதை மெல்ல எழுந்து அவனை வணங்கி, அன்பரே! உமக்கு வணக்கம்.

"காலத்திஞல் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்பார் திருவள்ளுவர். தாங்கள் எனக்கு உயிர் பிச்சை தந்து உயிரை உதவியது என்றும் மறக்கமுடியாதது. என்னுடைய மனமார்ந்த நன்றி தங்கட்கு உரியதாகுக. தங்கள் திருநாமம் யாது?

கோபாலன்: அம்மா! என்பேர் கோபாலன். சித்திரசாலையில் சித்திரம் எழுதப் பழகிக்கொண்டிருக்கிறேன். நான் என் கடமையைத் தானே செய்தேன். எல்லாம் முருகப் பெருமானுடைய கருணை. உன் பேர் யாது. ஏன் தண்ணீரில் விழுந்தீர்?

"அன்பரே! நான் இந்தவூர் ஐயனுர் முதலியாரது புதல்வி. என் பேர் கோதை. நீராடும்போது தவறி வீழ்ந்தேன். முருகனருளால் தங்களை அடிக்கடி சந்திக்க விரும்புகின்றேன். நன்றி. வருகின்றேன்" என்று கூறி கோதை பிரிந்தாள்.

கோபாலன் அவளுடைய பணிவு, இனிய மொழிகள், கரியவிழிகள், நன்றியறிவு முதலிய நற்குணங்களைக் கண்டு வியந்தான். அவளை அடிக்கடி காணவேண்டும் என்று விரும்பினுன். கோதை பள்ளிக்கூட விடுமுறைக் காலங்களில் கோபாலனுடன் விளையாடி மகிழ்வாள்.

காலச்சக்கரம் ஓய்வின்றிச் சுழலுமல்லவா? நாள்களும் மாதங்களும் ஆண்டுகளும் கடந்தன. கோதை மங்கைப் பருவம் அடைந்தாள். ஏற்கனவே எழிலின்கொழுந்தாக இருந்த அவள் இப்போது ஆயிரமாற்றுத் தங்கப்பதுமைபோல் விளங்கினாள். பலமுறை பார்த்தாலும் போதும் என்ற திருப்தி ஏற்படாது. வெறும் அழகு மட்டுமன்று; மாண்பும் அவள் பால் அமைந்திருந்தது.

ஐயனார் முதலியார் தனது அருமந்த செல்வப் புதல்விக்குத் திருமணம்புரியக் கருதி மனைவியுடன் ஆலோசித்தனர். அந்த ஊர் செல்வமலிந்த முருகப்ப முதலியார் புதல்வன் செங்கண்ணனுக்குத் திருமணஞ் செய்து தருவதாக முடிவுகட்டினார்.

இதனையறிந்த கோதைக்கு மிகுந்த வாதையேற்பட்டது. அவள் மனத்தில் நாடி நயந்திருந்த கோபாலனை யன்றி வேறு இந்திர குமாரனாக இருந்தாலும் அவள் விரும்புவாளா? கரும்பை விரும்பிய ஒருத்தி இரும்பை எப்படி விரும்புவாள்? தன் கருத்தை வெளியிடுவதற்குப் பெரிதும் அஞ்சினாள். நாணந் தடுத்தது. பொறுக்கமுடியாத கவலையடைந்தாள். பெண்பிறப்பையே வெறுத்தாள். சாவித்திரியின் சரித்திரத்தை நினைவு கூர்ந்தாள். மனத்தால் வரித்தவனைத் தவிர்த்து மற்றொருவனை மணப்பது கற்பு நெறிக்கு விரோதமாயிற்றே என்று கருதி அவள் உள்ளம் சுழன்றது. ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, தனது பாங்கி மூலம் தன் கருத்தைத் தாய்க்கு அறிவித்தாள். தாய் கணவனிடம் மகளுடைய நினைவைக் கூறினாள்.

மனைவியின் சொற்களைக் கேட்ட ஐயனார் முதலியாருக்குக் கோபமும் தாபமும் ஏற்பட்டன. "என்ன? கோபாலனை மணப்பதா? மிகவும் நன்றாக இருக்கின்றதே. கோதைக்கு அசடு தட்டிவிட்டது. போயும் போயும் பரம ஏழையாகிய அவனைத்தானா தேடிக் கண்டுபிடித்தாள். புத்திசாலி யென்று கருதினேன். முருகப்ப முதலியாருடைய செல்வமும், அவருடைய பெருந்தன்மையும் செங்கண்ணனுடைய அழகும் மதிக்கத்தக்கன அல்லவா? பெரியவர்கள் இஷ்டம்போல் நடப்பதல்லவா படித்த பெண்களின் கடமை. எனக்குத் தெரியாத ஆலோசனையா? பேசாமற் போ; நான் வாக்குக் கொடுத்துவிட்டேன். இனி அதை மாற்ற முடியாது." என்று கூறிவிட்டு வேகமாக வெளியே சென்றனர். இவற்றையெல்

லாம் மறைவிலிருந்துகேட்ட கோதை பெருந் துன்ப வாரிதியில் மூழ்கினுள். என்ன செய்வது என்று அறியாது தயங்கினுள்.

திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் நடந்துகொண்டிருந்தன. திருமணப்பத்திரிகை உறவினருக்கும் நண்பர்களுக்கும் அனுப்பப்பட்டது. இதனையறிந்த கோபாலன் உள்ளத்தில் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. கோதையை மணந்துகொள்ள இருக்கும் செங்கண்ணனை மிகவும்புண்ணிய சாலியாக எண்ணினுன். அறிவும் அழகும் மாண்பும் அமைந்த அம் மாதரசியை வாழ்க்கைத்துணைவியாகப் பெறும்பேறு தவஞ் செய்யாதவர்க்குக் கிடைக்காது என்று ஏங்கினுன்.

திருமணத்திற்கு முந்தினநாள் மணமகனுகப்போகும் செங்கண்ணனைத் திடீர் என்று அரசசேவகர்கள் விலங்கிட்டு சிறையிற்சேர்த்தனர். ஊரெங்கும் ஒரே பரபரப்பு. மாப்பிள்ளை சிறையானுர் என்று கேட்டு ஐயனுர் முதலியார் அதிர்ச்சியடைந்தார். காரணம் ஒருவருக்கும் விளங்கவில்லை.

மறுநாள் காலை நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது; அடுத்த ஊரில் நடந்த கொள்ளை—கொலையில் சம்பந்தப்பட்டவர்களில் செங்கண்ணனே முக்கியமானவன் என்று தகுந்த ஆதாரத்துடன் உறுதியாயிற்று. அது மிகவும் பெரிய கொள்ளையுடன் கூடிய கொலையாதலினுல், செங்கண்ணனுக்கும், அவனைச் சேர்ந்த சிலருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதனையறிந்த ஐயனுர் முதலியார் பெருந் துன்பமடைந்தார். கோதை பெரிதும் இன்பமடைந்தாள். நிகழ்ச்சி ஒன்று; ஆனுல் ஒருவருக்குத் துன்பம், ஒருவருக்கு இன்பம். மழை பொழிகின்றது. விவசாயிக்கு இன்பம்; செங்கல் சுடுகிறவனுக்குத் துன்பம்.

சில தினங்களுக்குப்பின் கோதை தாயாரைத் தொழுது, "அம்மா! இப்பொழுதாவது நான் விரும்பிய உத்தமசீலருக்கு என்னை மணஞ் செய்துதருமாறு அப்பாவுக்குச் சொல். நான் இந்தவுலகில் அவரைத் தவிர வேறு ஆடவரை விரும்பேன். கற்பின் உறுதி கல்லினும் வலியது. சாவித்திரியின் சரிதையைத் தாங்கள் கேட்டதில்லையா? தான் விரும்பிய கணவன் ஏழையாகக் காட்டில் கண்ணில்லாத தாய் தந்தையருடன் குறைந்த ஆயுள் உடையவனுக இருந்தும் சாவித்திரி அவனையே மணந்து அழியாத புகழ் பெற்றனள். ஆதலின் என் உள்

ளத்தில் குடிபுகுந்த குணசீலருக்கு என்னை வாழ்க்கைத் துணைவியாகச் செய்து என் கற்புநெறியைக் காப்பாற்றுங்கள்'' என்று வேண்டினாள்.

தாய் மகளின் கருத்தைக் கணவனுக்கு எத்தனை முறை எடுத்துக் கூறியும் பிடிவாதமுடைய அவர் இணங்கவில்லை.

கோதை சிந்தனையுலகில் உலவினாள். முடிவில் தன் பாங்கி மூலம் கோபாலனுக்குச் செய்தியனுப்பி ஒருநாள் இரவு கோதையும் கோபாலனும் அவ்வூரைவிட்டுக் கடந்து நெடுந்தூரஞ் சென்று ஒரு பெரிய நகரில் குடியேறினர். கோபாலன் சிறு திண்ணைப் பள்ளிக்கூடம் அமைத்து அதனால் வரும் சிறிய ஊதியத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தினான். கோதைக்குத் தாய் வீட்டில் நெய்யும் பாலும் தயிருமாக உண்ட மேலான உணவை விட, தன் கணவனுடன் கூடி குடிக்குங் கஞ்சி இனிமையாக இருந்தது. தாய் வீட்டில் உயர்ந்த கட்டிலில் பஞ்சணையில் படுத்த சுகத்தைக்காட்டிலும் கணவனுடன் கோரைப் பாயில் படுப்பதில் மகிழ்ச்சியிருந்தது. தேவலோக வாழ்வாக எண்ணி மகிழ்ந்தனள். அந்தப் புதிய தம்பதிகளின் வாழ்வில் ஒற்றுமை ஒளிவீசியது. அன்பு மணங் கமழ்ந்து, இன்ப ஊற்று சுரந்தது.

கோபாலன் கோதையை நோக்கி, ''என் கண்ணே! நீ செல்வச் சீமானுடைய புதல்வி. சுகபோகத்தின் சிகரத்தில் வாழ்ந்தவள். ஏழையாகிய என்னை விரும்பி எல்லா நலன்களையும் இழந்தனையே. என்னால் உனக்கு மிகுந்த துன்பம். உனக்கு நிரம்ப சௌகரியங்கள் செய்ய என்னால் முடியவில்லை'' என்றான்.

கோதை, ''என் அன்பே! சுகம் என்பதும் மகிழ்ச்சியென்பதும் பொருளில் இல்லை. மனதில் இருக்கின்றன. தங்களுடன் கூடிவாழும் வாழ்வில் இருக்கும் ஆனந்தம் எனக்கு அமரர் உலகிலும் உண்டாகாது. உங்களுடைய அன்பு விலையில்லாத இரத்தினம். உங்களுடைய இன்பங் கலந்த புன்னகை ஒரு கோடி பவுனுக்கு நிகராகும். நாட்டில் உள்ள சகல சுகங்களையும் வெறுத்துக் கணவனுடன் காட்டிற்குச் சென்ற சீதாதேவியின் கற்புநெறியைத் தாங்கள் அறிந்ததுதானே. ''கண்ணிற் சிறந்தவுறுப்பில்லை; கொண்டானின் துன்னிய கேளிர் பிறரில்லை'' என்ற நான்மணிக்கடிகையின் திருநெறியை நினைந்து பாருங்கள்'' என்று இனிய தேன் போன்ற மதுர

மொழியால் கணவனை மகிழ்வித்தாள். மனைவியினுடைய மாசற்ற அன்பை எண்ணி கோபாலன் உள்ளங் குழைந்து உருகினான்.

ஒரு வருடம் இனிது கடந்தது. அந்த நகரத்தைப் பரிபாலிக்கும் மன்னர் பெருமானுடைய அரண்மனைக்குப் பின்புறத்தில் இருந்தது கோபாலனுடைய குடிசை. ஒருநாள் அதிகாலையில் மன்னன்எழுந்து அரண்மனையின்புறத்தில் வந்தான். அதே சமயம் கோபாலனும் எழுந்து வெளியே வந்தான். மன்னன் அவனைப் பார்த்தவண்ணமாக நடந்ததனால் வாசற்படியில் கால் தடுக்கி நகம் பெயர்ந்தது. மிகவும் வருந்தினான் மன்னன். உடனே சீற்றமும் பொங்கியது. "எழுந்தவுடனே இவன் முகத்தில் விழித்தபடியால் காலில் அடிபட்டது. இவன் உயிருடன் இருந்தால் இவன் முகத்தில் விழித்து இன்னும் பலர் துன்புற வேண்டி நேரும். ஆதலின் இவனைக் கொண்டுபோய் கொலைக் கூடத்தில் சிரச்சேதம் செய்துவிடுங்கள்" என்று வெகுண்டு கூறினான்.

உடனே காவலர்கள் காலதூதர்போல் வந்து கோபாலன் கையில் விலங்குபூட்டி பலியிடக் கொண்டுபோகும் ஆட்டைப் போல் கொலைக்கூடத்திற்கு இழுத்துக்கொண்டு சென்றனர். உள்ளே முருகப் பெருமானைப் பூசித்துக்கொண்டிருந்த கோதையிடம் ஓடி ஒருத்தி, "கோதை! உன் கணவனை அரசனுடைய காவலர்கள் கொல்லுவதற்காக இழுத்துக்கொண்டு போகின்றார்கள்" என்று கூறினாள். அது கேட்ட கோதை "ஆ" என்று அலறினாள். ஓடினாள். வீதியில் விலங்குடன் போகும் தன் அன்புள்ள நாயகனைக் கண்டாள். "பிராணபதீ! ஏன் உம்மை இவ்வாறு இவர்கள் விலங்கிட்டு அழைத்துக்கொண்டுபோகின்றார்கள்? அந்தோ! நாம் ஒருவருக்கும் ஒரு சிறு தீங்கும் மனத்தினால்கூட செய்ததில்லையே! இது என்ன அநியாயம். இந்த ஊரில் தரும நெறியில்லையா? அரசரிடம் ஓடிக் கூறுகின்றேன்" என்றாள்.

கோபாலன், "கண்மணீ! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இக்காவலர் காரணமின்றி என்னை விலங்குபூட்டிக்கொண்டு போகின்றார்கள். வினையை நோவதைத் தவிர வேறு யாரை நோவது?" என்றான். கோதை, "ஐயா காவலர்களே! உங்களுக்குக் கோடி வணக்கம். ஒரு குற்றமும் புரியாத என் கொழுநரை ஏன் இப்படி நியாயமின்றிக் கொண்டு போகின்றீர்கள்?

உங்களைப பார்த்தால் நல்லவர்களைப்போல் காணப்படுகின் றதே'' என்று வினவினாள்.

காவலர்கள், "அம்மா! நாங்கள் என்ன செய்வோம். நீ எங்களை நொந்து என்ன பயன்? அரசனுடைய ஆணை. எய்த வனை நோவாமல் அம்பை நோவதுபோல் நீ எங்களை நோவ வேண்டாம்'' என்றனர். கோதை, "ஐயா! நான் அரசரிடம் ஓடி நியாயத்தை வழங்குமாறு வேண்டுவேன். கருணை மனம் படைத்த நீங்கள் அரசருடைய மறு உத்தரவு வரும் வரை சிறிது தாமதியுங்கள். எனக்கு மாங்கல்ய பிச்சை கொடுத்து உதவுங்கள்'' என்று வேண்டினாள். காவலர்கள், "அம்மா! நீங்கள் அரசரிடம் சென்று வேண்டிக்கொள்ளுங்கள். நாங்கள் கொலைக்களங் கொண்டுபோய் ஒரு நாழிகை தாமதிக்கின்றோம் சீக்கிரம் ஓடி அரசரை வேண்டுங்கள்'' என்றனர்.

கோதை கோ கோ என்று கதறி உடல் பதறி கொலுக் கூடத்தில் அமைச்சர்கள் சூழ வீற்றிருந்த மன்னனுடைய கால்மேல் வீழ்ந்து அழுதாள்.

மன்னன்:—அம்மா! நீங்கள் யார்? ஏன் இப்படி யழுகின்றீர் கள்? உங்களுக்கு என்ன கவலை! உங்களை யார் துன்புறுத்தியது? துன்புறுத்திய பாவிகள் யார்? விரைந்து கூறு.

கோதை.—கருணைக்கடலான காவலரே! உமது திருவடிகட்குப் பல கோடி வணக்கம். என் கணவர் ஒரு குற்றமுஞ் செய்யாதவர். அவரைத் தங்களுடைய ஏவலர்கள் விலங்கு பூட்டி கொலைக்கூடத்திற்கு அழைத்துக் கொண்டு போகின்றனர். தங்கள் மேலான கரு ணையை நாடி வந்திருக்கின்றேன். என் கணவர் தன்னை யறியாமல் ஏதாவது பிழை புரிந்திருந்தா லும் மன்னிக்க வேண்டும்.

மன்னன்:—ஓ! அவன் உன் கணவன்தானா? அம்மா! ஊரவர் நன்மையைக் கருதியே அவனைக் கொல்லுமாறு ஆணையிட்டுள்ளேன். நீ கவலைப்படாதே.

கோதை:—மன்னர் பெருமானே! ஊரவர் நன்மையைக் கருதி என் கணவனரைக் கொல்லுவதாகக் கூறுகின் றீரே? அது என்ன விஷயம்? விளக்கமாகச் சொல்லுங்கள்.

மன்னன்:—அம்மா! இன்று காலை நான் எழுந்தவுடன் உன் கணவன் முகத்தில் விழித்தேன். விழித்ததன் பயனாக என் காலில் பலத்த அடிபட்டது. இதுமாதிரி உன் கணவன் முகத்தில் விழிப்பவர்கட்கெல்லாம் இப்படித்தானே அடிபடும். ஆதலின் எல்லோருடைய நன்மையையும் நாடி மரண தண்டனை விதித்தேன். அது பற்றி நீ வருந்தி என்ன பயன்?

கோதை:—அரசர் கோமானே! அருட்கொண்டலே! சற்று நிதானமாகக் கேளுங்கள். எழுந்தவுடன் என் கணவர் முகத்தில் விழித்ததனுல் தங்கள் காலில் அடிபட்டது, ஆனுல் என் கணவனுர் எழுந்தவுடன் இன்று தங்கள் முகத்தில் விழித்தனர். அதனுல் என் கணவனுருக்குச் சிரச்சேதம் ஏற்படுகின்றது. இதுபோல் தங்கள் முகத்தில் விழித்தவர்கட்கெல்லாம் சிரச்சேதம் ஏற்படுமானுல் தாங்கள் இருப்பதனுல் உலகிற்கு எவ்வளவு பெரிய கேடு என்பதை நீங்களே சற்று சிந்தியுங்கள். கருணமூர்த்தி! என் கணவர் முகத்தில் விழித்த உங்களுக்குக் காலில் மட்டுமே அடிபட்டது. உங்கள் முகத்தில் விழித்த என்கணவர் உயிரே போகுமானுல் நீங்கள் எவ்வளவு பயங்கரமானவர் என்பதை உணருங்கள். ஆதலின் எது நியாயம் என்பதை நிதானமாக அறிந்து நீதியை வழங்குங்கள்'' என்று மிகவும் அருமையாகக் கூறினுள்.

மன்னர் பெருமானும் அங்குள்ள மந்திரிமார்களும் கோதையின் திறமையான சொற்களைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். மன்னன், உடனே கொலைக்கூடத்திற்கு ஓடி கோபாலனை மீட்டு கோதைக்கு அநேக ஆறுதல் வசனங்களைப் புகன்று அனுப்பினுன். பின்னர் கோபாலனுக்கு அரசாங்கத்தில் சிறந்த உத்தியோகத்தைத் தந்து, ஒருவீடும் உதவினுன். மன்னருடைய பரிபூரணமான கருணைக்கு கோபாலன் உரியவனுயினுன்.

கோபாலன், தன்னை எமன் வாயிலிருந்து சாவித்திரி சத்தியவானை மீட்டதுபோல், தன் மனைவி கோதை மன்னனிடம் சிறந்த அறிவும், அறமும் பொருந்திய வசனங்களைக் கூறி

உ

தலைநோய்க்கு மருந்து

தெய்வத் தமிழை உயிரினும் உயர்ந்ததாகக் கருதி ஓம்பினார்கள் பண்டைக்காலத்திருந்த ஆன்றோர்கள். தமிழ்ப் புலவர்கள் பலர் இருந்து தமிழை வளர்த்தார்கள். தமிழ்ப் புலவர்களை அரசர்கள் ஆதரித்தார்கள். அரசர்களும் தமிழைக் கற்று தமிழ்ப் புலமை தாங்கிநின்றார்கள். பல புலவர்கள் கூடி சங்கம் அமைத்து தமிழை ஆய்ந்து வளமை செய்தார்கள்.

அந்த வகையில் கடைச் சங்கம் மதுரையில் மிகச் சிறப்பாக விளங்கியது. அதில் நாற்பத்தொன்பது புலவர்கள் தெள்ளு தமிழ்த் தெய்வங்களைப் போல நடமாடினார்கள். அவர்களுக்குள் சீத்தலைச் சாத்தனார் என்பவர் ஒருவர். அவர் சிறந்த அருட்பண்பு உடையவர். ஒழுக்கமென்னும் உயர் குன்றேறி நின்றவர். என்றும் பிறர் மனம் புண்பட நடக்க மாட்டார்.

அந்தக்காலத்தில் புலவர்கள் புதிதாக ஒருநூல் செய்தால், அதனைச் சங்கப்புலவர்கள் ஒத்துக்கொண்டால்தான் உலகம் ஒத்துக்கொள்ளும். சங்கமேறாத நூல் வெளி வந்து உலவமுடியாது. இந்த நியதி அப்போது தமிழுலகில் இருந்தது. புலவர் பலர் நூல்களைச் செய்து, மதிப்புரை தருமாறு சாத்தனாரிடம் வந்து படிப்பார்கள். அவ்வாறு புலவர்கள் படிக்கும் பாடலில் ஏதாவது குற்றம் இருக்குமானால் உள்ளம் வருந்தி, பாடிய புலவர்மீது வருந்தாது, இதனைக் கேட்குமாறு இருந்த தன்னையே நொந்து, சாத்தனார் தனது திருக்கரத்திலுள்ள எழுத்தாணியால் தன்தலையைக் குத்திக்கொள்வார். இதைக் கண்ட புலவர்கள் அஞ்சி குற்றமின்றி நூல்களைச் செய்வார்கள். இவ்வாறு நாடோறும் புலவர்கள் வந்து தாம் செய்த நூல்களைப் படிக்குந்தோறும் குற்றங்கள் கண்டவுடன்

கொலைக் கூடத்தினின்றும் தன்னை மீட்டதைக் குறித்து எல்லையில்லாத மகிழ்ச்சியடைந்தான். மிகவும் பாராட்டினான்.

ஐயனார் முதலியார் தனக்கு வேறு சந்ததியில்லாமையால் தனக்கு நெருங்கிய உறவினரில் ஒருவன் மகனை சுவீகாரஞ் செய்துகொண்டார். சுவீகாரஞ் செய்துகொண்ட அம்மகன் சில காலத்திற்குப்பின் ஐயனார் முதலியாரையும் அவர் மனைவியாரையும் அடித்து விரட்டிவிட்டான். நிர்க்கதியாக ஐயனார் முதலியார் மனைவியுடன் ஊர் ஊராக அலைந்து கொண்டுவந்தார். அவர்களைத் தற்செயலாக அந்த நகரில் கோபாலன் கண்டான். தனது மாமனாரையும் மாமியையும் பணிந்து தனது வீட்டிற்கு அழைத்துப்போய் தாய் தந்தையரைப்போல் ஆதரித்தான். தான் வெறுத்த மருகன் தனக்கு அன்பு செய்வதைக் கண்ட ஐயனார் முதலியார் நாணினார். கோதை தாய் தந்தையரை அன்பு செய்து தன் கணவனுடன் இனிது வாழ்ந்தாள்.

தலையில் எழுத்தாணியால் குத்திக்கொள்வார். அதனால் எப்பொழுதும் அவர் தலையில் சீழ் வடியும். ஆனபடியால் சீத்தலைச் சாத்தனார் எனப் பேர்பெற்றார்.

குற்றம்பெய்து பாடிப் படிப்பவனை நோவாமல், தன்னை நொந்துகொள்ளும் அவருடைய பெருமிதத்தையும், தமிழ்ப் பற்றையும் உன்னும்போது நமது மனம் உருகுகின்றது.

சாத்தனார்க்குச் சதா தலைநோய்; தீராத நோய். ஏன்? குற்றமுடைய பாடலைக் கண்டவுடனே முன்னிருந்த புண்ணின் மேல் மீண்டும் குத்திக்கொள்ளுவார். எப்படி அந்தப் புண் ஆறும்? ஆறாப் புண். மாறாத மனப் புண்.

இத்தகைய தலைநோய்க்கு மருந்தேயில்லை. ஆனால் கடவுள் கருணை சும்மாவிருக்கவில்லை. ஒரு நோய் என்றால் உண்டானால் ஒரு மருந்தும் அதற்கு உண்டாக்குவது கடவுளுடைய கருணையின் திறம். சாதாரணமான தலைவலி சிந்திற்கொடியிலிருந்து எடுத்த சர்க்கரை, சுக்கு, தேன் இந்த மூன்றையும் முறையே கூட்டி யுண்டவர்க்குத் தீர்ந்துவிடும்.

திருவள்ளுவதேவர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறள் சங்கமேற வந்தது. சாத்தனார் இருந்து அதனைக் கேட்பாராயினார். ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களையும் அதன் உள்ளுரையுடன் பல நாட்கள் கேட்டனர். அதிலே குற்றம் இருக்கமுடியாதல்லவா? அமிர்தம் போன்ற அத் தமிழ் மறையைக் கேட்டு அவர் அளவற்ற மகிழ்ச்சியடைந்தனர். பலநாட்களாக வேறுபுலவர்களது குற்றமுடைய நூல்களைக் கேளாமல், வள்ளுவருடைய தெள்ளு தமிழையே கேட்டுக்கொண்டிருந்தபடியால், சீத்தலைச்சாத்தனாருடைய தலைப்புண்ணும், அதனால் வந்த தலைநோயும் நீங்கிவிட்டன.

சாத்தனாருடைய தலைநோயை அகற்றிய கைகண்ட மருந்து திருக்குறள். அது பிறவி நோயையும் அகற்றும். ஒவ்வொரு தமிழ் மகனும் திருக்குறளைப் படிக்கவேண்டும். திருவள்ளுவர் பிறந்த தமிழ் நாட்டில் பிறப்பதற்கு நாம் என்ன புண்ணியஞ் செய்தோமோ? என்று மனம் மகிழவேண்டும்.

சங்கப்புலவரில் ஒரு பெரிய மருத்துவர் (வயித்தியர்) இருந்தார். அவர்பேர் மருத்துவன் தாமோதரனார். அவர் அக்காலத்தில் மருத்துவ உலகிற்குத் தலைமை பூண்டிருந்தார். அவருடைய பெருமை அளவிடற்கரியது, அவர் "தலைநோய்க்கு மருந்து இது" என்றும், சாத்தனார் தலைநோய்க்கு மருந்து திருக்குறள், என்றும் கூறுகின்றார்.

சிந்நீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

ஏது சரி?

(கி. வா. ஜகந்நாதன்)

முருகக் கடவுளைப் பாடிய புலவர்களில் பலரை நாம் மறந்துவிட்டோம். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அவர்கள் பாடிய பாடல்கள் தமிழ்நாட்டில் தொடர்ந்து வழங்கவில்லை. இடைக்காலத்தில் அவர்கள் பாடிய பாடல்களைக் கவனிப்பாரே இல்லாமற்போயினர். கடைச் சங்க காலத்து நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பவற்றில் அப்பாடல்கள் உள்ளன. அவற்றைப் படியாமல் பாடஞ்சொல்லாமல் இடையிலே சில காலம் தூங்கிக்கொண்டிருந்தது. இறைவன் திருவருளால் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தோன்றிச் சங்க நூல்களை மீட்டும் உருவாக்கித் தமிழுலகத்துக்கு வழங்கினார்கள். அவர்களுடைய பெரு முயற்சியால் அந்தப் பழம் பாடல்களைத் தமிழ் நாடு முழுவதும் இன்று படித்து இன்புறுகிறது.

அந்தப் பாடல்களின் நடைக்கும் பிற்காலக் கவிகளின் நடைக்கும் மிக்க வேறுபாடு உண்டு. அவை மரபு தெரியாமல் பழக்கம் இல்லாமல் படிக்கத் தொடங்கினால் மயக்கத்தை உண்டாக்கும். அதனால் அவற்றை யாவரும் படித்துப் பாராட்ட இயலாமற் போயிற்று.

இரண்டாவது காரணம்: முருகனது புகழை அமுததாரை போன்ற கவித்துவத்தைப் பெற்ற அருணகிரிநாதர் மிக விரிவாகப் பாடியருளினர். அவருடைய சரளமான வாக்கில் ஈடுபட்ட பிறகு, கடினமான பிற பாடல்களை ஆராய எல்லோருக்கும் உள்ளம் செல்வதில்லை. அப்படியே எடுத்து விழுங்கும் அல்வா எளிதிலே கிடைக்கும்போது, பல்லை உடைக்கும் பொரிவிளங்காய் உருண்டையைக் கடித்துக்கொண்டிருக்க விரும்புபவர் யார்?

ஆயினும் முருகனுடைய பெருமையையும், தமிழ்நாட்டார் பண்டைப் பழங்கால முதலே அப்பெருமானை வழிபட்டு வரும் சிறப்பையும், அவர்கள் வழிபட்டு வந்த முறைகளையும் நன்றாக உணரவேண்டுமானால், அந்தப் பழம் பாடல்களைப் படித்துத் தெளியவேண்டும். முருகனைத் தமிழ்த் தெய்வமென்று கொண்டாடுகின்றோம். ஏன் அப்படிச் சொல்லவேண்டும்? மற்ற நாட்டினருக்கெல்லாம் அவன் தெய்வம் அல்லவா? இத்

தகைய கேள்விகளுக்குத் தக்க விடைகள் வேண்டுமாயின், இந்தப் பழைய நூல்களில் உள்ள செய்திகளை ஆராய வேண்டும்.

திருமுருகாற்றுப் படை இன்றும் முருகன் அடியார்களால் பாராயணம் செய்யப்பெற்று வருகின்றது. பழைய பாடல்களில் அது ஒன்றுதான் நடுவில் மறைந்துபோகாமல் தமிழ் நாட்டில் உலாவி வருகின்றது. சங்கநூல்கள் அத்தனையும் மறைந்து போயிருந்தாலும், திருமுருகாற்றுப்படை ஒன்று மாத்திரம் நின்றிருக்கும். பனையேட்டில் எழுதியதோடு நில்லாமல், பக்தர்கள் அதனைத் தங்கள் மன ஏட்டில் எழுதிப் பாராயணம் செய்து பாதுகாத்துவந்தார்கள். முருகனுடைய சிறப்பை மிக விரிவாகச் சொல்லும் இயல்பினால் அந்த நூல் மறையாமல் மங்காமல் நின்று ஒளிர்கிறது. அந்த நூலை இயற்றிய சிறப்பினால், நக்கீரரையும் தமிழுலகம் மறக்கவில்லை. அருணகிரிநாதர் மிக அருமையாக அப்பெரும்புலவரைப் பாராட்டியிருக்கிறார்.

இத்தகைய சிறப்புப் பெற்ற திருமுருகாற்றுப் படையும் எளிதில் விளங்கும் நூலாகப் பலருக்குத் தோன்றவில்லை. அதுவும் பண்டைப் பழைய நூல்களில் ஒன்றாக இருப்பதுதான் காரணம். இக்காலத்தில் வழங்காத பல சொற்கள் அந் நூலில் உள்ளன. இக்காலத்தில் வழங்காத வழக்கங்களை அதில் காணலாம். இக்காலத்தினருக்கு முரண்பாடாகத் தோற்றும் சில செய்திகளைக்கூட அதில் காணலாம்.

காலந்தோறும் மனிதனுடைய பேச்சில் சில மாற்றங்கள் உண்டாகின்றன; செய்கையில் சில வேறுபாடுகள் அமைகின்றன; எண்ணங்களிலும் கொள்கைகளிலும் சில மாறுபாடுகளைப் பார்க்கலாம். இந்த வேறுபாடுகளைப் பண்டை நூல்களைப் படித்து உணரலாம். முருக வழிபாட்டிலும், முருகனைப் பற்றிய வரலாறுகளிலும் இப்படியே சில வேறுபாடுகள் இருப்பதையும் காணலாம்.

திருமுருகாற்றுப்படையில் உள்ள சில செய்திகள் பிற்காலத்து நூல்களால் விளங்கா. நக்கீரர் காலத்திலும் அதற்கு முற்பட்டகாலத்திலும் எழுந்த நூல்களைக் கொண்டே அச் செய்திகளைத் தெளிந்துகொள்ளவேண்டும். பரிபாடலில் உள்ள முருகனைப்பற்றிய பாடல்களும், பிற சங்க நூலில்வரும் பாடல்களும் இந்த விளக்கத்தைப் பெற உதவும். ஆகவே அந்

தப் பாடல்களின் கருத்தைத் தெரிந்துகொள்வதனுல் நம்முடைய கொள்கையை மாற்றிக்கொள்ளவேண்டும் என்ற அவசியம் இல்லை. பழைய வழக்கமே மீண்டும் வரவேண்டும் என்ற வற்புறுத்தலும் இல்லை.

ஒரு சின்ன உதாரணத்தைப் பார்க்கலாம். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் முருகனுடைய திரு அவதாரம் என்பது ஒரு சாரார் கொள்கை; அப்படிச் சொல்லக்கூடாது என்பது வேருெரு சாரார் கொள்கை. சேக்கிழார் காலத்தில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர், திருஞானசம்பந்தரை முருகவேளின் அவதாரமாகவே சொல்கிருர்.

அவர் இயற்றிய தக்கயாகப்பரணி என்னும் நூலில் திருஞானசம்பந்தர் சமணர்களை வாதில் வென்ற கதை வருகிறது. தேவி அந்தக் கதையைச் சொல்லும்படி ஏவ, கலைமகள் கதையைச் சொல்கிருள். தேவி ஏவுவதாக உள்ள பாட்டு வருமாறு:

வருகதை, தெய்வமகளென் மருமகள், வள்ளிவதுவை
மனமகிழ் பிள்ளைமுருகன் மதுரையில் வெல்லும் இனிய

தொருகதை சொல்லு,தவள ஒளிவிரி செவ்விமுளரி
ஒளிதிகழ் அல்லிகமழும் ஒருமனை வல்லிஎனவே.

'வெள்ளிய ஒளி விரிகின்ற செவ்வியை யுடைய தாமரையின் அகவிதழ் மணம் வீசுகின்ற இடத்தையே மனையாகக் கொண்ட கலைமகளே, நீ இப்போது ஒரு கதையைச் சொல்வாயாக: தெய்வப் பெண்ணும் எனக்கு மருமகளுமாகிய வள்ளியை மணம் செய்து மனமகிழ்ந்த பிள்ளையாகிய முருகன் மதுரையில் வெற்றி பெற்ற அந்த இனிய கதையைச் சொல்லு' என்று தேவி கேட்கிருள்.

இங்கே தெளிவாக, 'முருகன் மதுரையில் வெல்லும் இனியதொரு கதை' என்று ஞானசம்பந்தரை முருகனுகவே அம்பிகை சொல்கிருள்.

பிற்காலத்தில் வந்த பல புலவர்கள் ஞானசம்பந்தரை முருகன் திருவவதாரமாகவே பாடுகின்றுர்கள். அருணகிரிநாதர் பல இடங்களில் ஞானசம்பந்தர் முருகன் திருவவதாரம் என்பதைப் பலவகையிலே சொல்லுகிருர்.

ஆனுல் சேக்கிழார் பெரியபுராணத்தில் முருகனுடைய திருவவதாரமே ஆளுடைய பிள்ளையார் என்று கூறவில்லை.

சுந்தரமூர்த்தி நாயனர் ஆலாலசுந்தரரின் திருவவதாரம் என்று பாடிய அவர் சம்பந்தப்பெருமானை முருகன் திருவவதார மென்று சொல்லவில்லை. அப்பெருமான் உமாதேவியாருடைய திருமுலைப்பாலை உண்டமையாலும், இறைவனைச் சற்புத்திர மார்க்கத்தில் வழிபட்டமையாலும் ஆளுடைய பிள்ளையார் என்ற திருநாமம் பெற்ருர். பிள்ளையார், ஆளுடைய பிள்ளை யார், இறைவர் திருமகனர் என்று வரும் இடங்களில் எல்லாம் முருகன் அவதாரம் என்று கொள்வார் சிலர். அது சேக்கிழார் கொள்கையன்று. அவ்வாருயின் வெளிப்படையாகவே அவர் எங்கேனும் ஓரிடத்தில் சொல்லி யிருப்பார்.

சேக்கிழாருக்கு முன் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமி களைப் பாடினவர் நம்பியாண்டார் நம்பி. சுந்தரமூர்த்தி சுவாமி கள் பாடிய திருத்தொண்டத்தொகையைச் சற்று விரித்துத் திருத்தொண்டர் திருவந்தாதி பாடியவர் அப்பெருமான். சேக் கிழார் தம்முடைய பெரிய புராணத்துக்கு மூலமாகத் திருத் தொண்டத் தொகையையும், திருத்தொண்டர் திருவந்தாதியை யும் வைத்துக்கொண்டார்.

நம்பியாண்டார் நம்பி பாடிய ஆளுடைய பிள்ளையார் திருக் கலம்பகம் என்னும் நூலில் ஒரு பாட்டு வருகிறது. அங்கே சம்பந்தப்பெருமான் முருகவேளுடைய அவதாரம் என்று நினைப்பதற்குரிய குறிப்பொன்று இருக்கிறது. பாட்டு அகத் துறையில் அமைந்தது. தோழி தலைவனைப் பார்த்துச் சொல் கிருள். "அயலாரெல்லாம் நின் காதலியை மணம் பேசுவதற் காக வரப்போகிருர்கள். அதற்குமுன் நீ இவளை மணந்து கொள்ளவோ, அழைத்துச்செல்லவோ வேண்டும்" என்று அறிவுறுத்துகிருள்.

சரதம், மணமலி பரிசம் வருவன.
தளர்வில் புகலியர் அதிபன், நதிதரு
வரதன், அணிதமிழ் விரகன், மிகுபுகழ்
மருவு சுருதிநன் மலையின் அமர்தரு
விரதம் உடையைநின் இடையி னவண்மனம்
விரைசெய் குழலியை அணைவ தரிதென
இரதம் அழிதர வருதன் முனம்இனி
எளிய தொருவகை கருது மலையனே.

என்பது 23-ஆவது பாட்டு. தலைவனைப்பற்றிச் சொல்கையில், 'நீ ஞான சம்பந்தப்பெருமானுக்குரிய சுருதி மலையில் தங்கு

கின்ற விரதம் உடையாய்' என்று பாட்டுடைத் தலைவராகிய சம்பந்தப்பெருமான் செய்தி வருகிறது. அங்கே, அப்பெருமானை நம்பியாண்டார் நம்பிகள் வருணிக்கிறார். தளர்வில் புகலியர் அதிபன், நதிதருவரதன், அணிதமிழ் விரகன் என மூன்றுதொடர்கள் வருகின்றன. சீகாழிப்பெருமான், தமிழ்விரகன் என்பன யாவரும் தெளிந்துகொள்ளக் கூடியனவே. நதிதரு வரதன் என்ற தொடரை மாத்திரம் சற்று ஆய்ந்து சிந்திக்கவேண்டும். நதியைத் தரும் வரதன் என்றோ, நதியால் தரப்பெற்ற வரதன் என்றோ அதற்குப் பொருள்கொள்ளலாம். சம்பந்தர் எந்த நதியையும் உண்டாக்கியதாக வரலாறில்லை. ஆகவே நதியால் தரப்பெற்றவரதன் என்பதுதான் பொருத்தமாக இருக்க வேண்டும். ஞானசம்பந்தர் எந்த நதியால் தரப்பெற்றவர்? சம்பந்தர் வரலாற்றில் அந்தச் செய்தியையும் காண முடியாது. ஆனால் சம்பந்தர் முருகனுடைய் திருவவதாரம் என்ற நினைவோடு பார்த்தால் இத் தொடருக்குப் பொருள் விளங்கிவிடும். கங்காநதியால் தரப்பெற்ற வரதனல்லவா முருகன்? காங்கேயன் என்ற திருநாமம் அதனால் அன்றோ அமைந்தது?

"ஆயிரமுகத்துநதி பாலனும்"

என்று நதிதரு வரதனைப் பாடுகின்றார் அருணகிரிநாதர்.

ஆதலின் நம்பியாண்டார் நம்பிகளுக்கும் திருஞானசம்பந்தர் முருகன் திருவவதாரம் என்பது உடம்பாடே என்று கொள்ளலாம்.

இவ்வாறு இருக்க, ஒரு சாரார் இந்தக் கொள்கையை மறுப்பதற்குக் காரணம் என்ன? தக்க காரணம் இருக்கிறது. ஞானசம்பந்தப்பெருமான் ஒரு தந்தைக்கும் தாய்க்கும் புதல்வராகத் தோன்றினார். இவ்வாறு 'பிறத்தல் இறைவனுக்கு ஏற்புடையதன்று. ஆதலின் முருகனுடைய அவதாரமாகக் கூறுதல் பொருந்தாது' என்பதே இந்த அன்பர்களின் எண்ணம்.

அருணகிரிநாதர்,

"பெம்மான் முருகன் பிறவான் இறவான்"

என்று பாடினார். அவரே ஞானசம்பந்தப் பெருமானை முருகனாகப் பாடிப் போற்றினார். இந்த இரண்டிற்கும் முரண்பாடு இருப்பதுபோலத் தோற்றினும், உண்மையில் முரண்பாடில்லை. முருகனுடைய அமிசாவதாரம் என்று கொண்டு சமாதானம் செய்யலாம். 'அந்தச் சமாதானத்துக்கே இடமில்லாமல் இருக்

கட்டுமே' என்பது முருகனவதார மன்றென்பார் எண்ணம். மகாகவி மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்கு ஞானசம்பந்தர் முருகன் அவதாரம் என்று சொல்வது உடம்பாடன்று.

இந்தச் சிக்கலை ஒரு புலவர் வேருெரு விதத்தில் தீர்த்து விட்டதாகக் கேள்வியுற்றிருக்கிறேன். 'ஞானசம்பந்தர் தாய் வயிற்றிலே பிறக்கவில்லை. சிவபாத இருதயருக்குப் பொய் கையின்கண் தாமரைப் பூவில் கிடைத்தார்' என்று அவர் பாடி யிருக்கிருராம்.

எப்படி ஆனாலும் இந்த இருவகைக் கொள்கைகளும் நூல் வழக்காற்றில் நிலைத்துப்போய்விட்டன. ஒரே காலத்தில் இருவகைக் கொள்கைகளும் தமிழ் நாட்டில் உலவுகின்றன. இருவகையினரும் முருகனிடத்தில் சிறந்த பக்தி உடையவர் களே. யார் சொல்வது தவறு என்று கூறுவது? எதுசரி என்று நிர்த்தாரணம் செய்வது?

இவ்வாறு ஒரே காலத்தில் கொள்கை வேறுபாடுகள் இருக்கும்போது, நாளடைவில் வேறுபாடு அமைவது வியப் பன்று. அதைக்கண்டு நம் கொள்கைக்கு ஊறுபாடு நேர வழி இல்லை. முருகவேள் திருவடிமலர்களில் வைக்கும் அன்பு குறையுமென்ற அச்சத்துக்கும் இடமில்லை. முருகன் மாற வில்லை. அவனைப் பற்றிய நினைவு, பேச்சு இவையே மாறு கின்றன. இந்தச் சிறிய மாற்றங்களை உணர்வதில் தவறு ஏதும் இல்லை. உணர்ந்து மகிழவும் இடம் உண்டு. பழைய நூல்களைப் படித்துணர்ந்தால் இந்த நிலையில் நிற்க வழி பிறக்கும்.

—:—

Printed & Published by M. Madhusoodana Sivam at the Thiruppugal Amirtham Press, 144 Swaminaicken Street, Chindaripeta, Madras, Editor: Sri Kirupanandavari.

மதிப்புரை

திருச்செந்தூர் ஸ்ரீசுப்ரமணிய புஜங்கம் (உரையுடன்)

வடமொழியில் ஆதிசங்கராசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய அரிய நூலை அன்பர் உயர்திரு கோவை கவியரசு, தமிழ்ப் புலவர், கு. நடேசக் கவுண்டர் அவர்கள் மிகவும் அருமையாகச் செந்தமிழில் பாடி வெளியிட்டனர். அன்பும், அறிவும், சிவநெறியும் ஒருங்கே யமையப்பெற்றவர் திரு. நடேசக் கவுண்டர் அவர்கள். அவர்களுடைய வாக்கு மிகவும் வளமையானது. இதற்குச் செந்தில் திருக்கோயில் நிறைமொழி ஆணையாளர் உயர்திரு விவேகானந்தம் பிள்ளையவர்கள் மிகவும் நன்றாக உரையெழுதி வெளியிட்டுள்ளார்கள். முருகனடியார்கள் அனைவரும் படித்துப் பயனடைய வேண்டிய நூல். விலை அணா மூன்று. கிடைக்குமிடம்: ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர்.

சிவஞான சித்தியார்—ஆராய்ச்சி

சிவஞான சித்தியார், சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் மிகவும் விழுமிய நூல், நீண்டகாலமாக சித்தாந்த ஆராய்ச்சியும் சிவநெறியும் உடைய தூத்துக்குடி சித்தாந்தப் பேராசிரியர் உயர்திரு. ந. சிவகுருநாதபிள்ளையவர்கள் சிறந்த ஆராய்ச்சியுடன் இதனை வெளியிட்டுள்ளார்கள். ஆன்மயீடேற்றத்தில் கருத்துடைய ஒவ்வொருவரும் படித்து நன்மை யடையவேண்டிய நூல். விலை, ரூ. 1–12–0 கிடைக்குமிடம்:

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1/140 பிராட்வே, சென்னை-1

தேவாரத் திருப்பதிகங்கள் (இராகஸ்வரதாள அமைப்புடன்)

தேவார திருப்புகழ் வித்வான் புதுவை ஆ. விநாயக முதலியாரவர்கள் இருபது தேவாரத்திருப்பதிகங்களை ஸ்வர தாளங்களுடன் வெளியிட்டுள்ளார். இசைப்பயிற்சியுள்ளோர் தேவாரப் பதிகங்களை ஓதியுணர உதவும் நூல். தேவார திருப்புகழ் வித்வான் புதுவை ஆ. விநாயகமுதலியார், 54 திருப்பக்குடல்தெரு, பெரிய காஞ்சீபுரம் என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தெய்வசக்தி

மதுராந்தகம் ஏரிகாத்த பெருமாள், திருக்கழுக்குன்றத்தில் சங்கு பிறந்த அற்புதம்...மூட்டைகாத்த முருகன், என்பனவாதி ஆறு தலைப்புக்களின் கீழ் உண்மைத் திருவிளையாடல்கள் ஆறை திரு. ஆ சுப்பிரமணிய நாயகர் அவர்கள் வெளியிட்டுள்ளனர். விலை அணா இரண்டு. கிடைக்குமிடம், திரு ஆ. சுப்பிரமணிய நாயகர், 35, வெங்கடேச நாயகன் வீதி, சென்னை-12.

கரூர் விலை என்பதே நம்பிக்கை

விசேஷ காலங்களுக்கும் கலியாணங்களுக்கும்

பனாரஸ், சேலம், பெங்களூர், கோயமுத்தூர், காஞ்சீபுரம், மதுரை

பட்டு & நூல் ஜவுளி தினுசுகள்

ஏராளமாக வரவழைத்திருக்கிறோம். தவறாது விஜயம் செய்யுங்கள்

ஜெ. மூ. சாமி

கீழமாசி வீதி, (பெரிய விளக்குத்தூண் சமீபம்) மதுரை

Head Office:
வடக்கு மாதுளம் கோல்லைத்தெரு, உறையூர், திருச்சி

Branch:
கடை வீதி நாகப்பட்டினம்